SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

EDB SRI LANKA

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கையின் பரிசு மற்றும் வாழ்க்கைமுறைப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் துறைகளை மையமாகக் கொண்டு, ஆக்கத் தொழில்துறை தொடர்பான விளம்பர வீடியோ ஒன்றை தயாரிப்பதற்கான சேவை வழங்குநர் ஒருவரின் தெரிவுக்கான பெறுகை - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB)

1. இலங்கையரின் ஆக்கத் தொழில்துறையில் ஆற்றல்கள், திறன்கள் மற்றும் சாத்தியக்கூறுகளை திறம்பட வெளிப்படுத்தும் உயர்தரமான, தொழில்முறையான ஒலி–ஒளி (Audio-Visual – AV) விளக்கக்காட்சி ஒன்றை மேம்படுத்துவதற்கு கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையில் செயற்படும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் (SLEDB) முன்மொழியப்பட்டுள்ளது.

2. இலங்கையின் பரிசு மற்றும் வாழ்க்கைமுறைப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் துறைகளை மையமாகக் கொண்டு, ஆக்கத் தொழிற்துறை தொடர்பான விளம்பர வீடியோ ஒன்றை தயாரிப்பதற்காக பொருத்தமான சேவை வழங்குநர் ஒருவரை தேர்வு செய்வதற்கு பொருத்தமான மற்றும் தகுதி பெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (SLEDB) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

3. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் (GOSL) பெறுகை வழிகாட்டல்களில் வரையறுக்கப்பட்டவாறு தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறையை பயன்படுத்தி விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு இது பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகைமை தேவைகளை பூர்த்தி செய்த அனைத்து தகுதிபெற்ற விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

4. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் தொலைபேசி: 011-2300702, மின்னஞ்சல்: disna@edb.gov.lk கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 42, NDB – EDB கோபுரம், கட்டம் 06, பெறுகைப் பிரிவு/ உதவிப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.

5. பெறுகை ஆவணத்தை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (SLEDB) இணையதளத்தில் உள்ள "அறிவிப்புகள்" (Announcements) பகுதியில் இருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம் (https://www.srilankabusiness.com/anouncements). விலைமனு முன்மொழிவைத் தகுதியான முன்மொழிவாகக் கருதுவதற்கு, மீளளிக்கப்படாத 1,000.00 இலங்கை ரூபா கட்டணத்தை விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கு விபரங்களின்படி செலுத்த வேண்டும். அத்துடன், பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் அல்லது வங்கிக் கட்டண ரசீதின் பிரதியையும் முன்மொழிவுடன் இணைத்தல் வேண்டும். இவ்வாறு பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது ரசீது இணைக்கப்படாத முன்மொழிவுகள் மதிப்பீட்டுக்காகக் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

6. அசல் விலைமனு, கடித உறையில் மூடப்பட்டு இடது பக்க மேல் மூலையில், "இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) - இலங்கையின் பரிசு மற்றும் வாழ்க்கைமுறைப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் துறைகளை மையமாகக் கொண்டு, ஆக்கத் தொழில்துறை தொடர்பான விளம்பர வீடியோ ஒன்றை தயாரிப்பதற்கான சேவை வழங்குநரின் பெறுகை" விலைமனு EDB/PU/NCB/2026/06 என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுவை சமர்ப்பிப்பவர் பெயர் மற்றும் நிறுவனம் கடித உறையில் இடம்பெறுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2026 நவம்பர் 19 ஆம் திகதி பி.ப. 02.00 இற்கு முன்னர் குறித்த கொடுப்பனவை மேற்கொள்வதன் மூலம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பெறுகைப் பிரிவில் (கட்டம் 6) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவது அல்லது தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு, 6ஆவது மாடி, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் ஐம்பதாயிரம் இலங்கை ரூபாவின் (இ.ரூபா 50,000.00) பெறுகை ஆவணத்தில் தரப்பட்ட வடிவத்தைப் பயன்படுத்தி வங்கி உத்தரவாத வடிவில் விலைமனு பிணை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. விலைமனுதாரர்கள் பிரதி ஒன்றுடன் முத்திரை பொறிக்கப்பட்ட தொழில்நுட்ப முன்மாழிவு மற்றும் நிதி முன்மொழிவின் பிரதியை தனித்தனியே சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர். தொழில்நுட்பம் மற்றும் நிதி முன்மொழிவைக் கொண்ட கடித உறைகளை வெளிப்புற ஒற்றை கடித உறை ஒன்றில் இட்டு முத்திரை இடுதல் வேண்டும். இந்த வழிகாட்டலை பின்பற்றத் தவறும் விலைமனுதாரர்கள் மேலதிக மதிப்பீட்டுக்கு கருத்தில்கொள்ளப்படமாட்டார்கள்

8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியில் இருந்து 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

9. தொழில்நுட்ப முன்மொழிவை ஏற்பது 2026 நவம்பர் 19 ஆம் திகதி பி.ப. 2.00 இற்கு நிறைவடைவதோடு மேலுள்ள பந்தியில் (4) தரப்பட்ட முகவரியில் SLEDB இன் அலுவலகத்தில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் அதே தினத்தில் பி.ப. 2.15 இற்கு திறக்கப்படும். விலைமனுதாரர் ஒருவரின் சார்பில் பங்கேற்கும் எந்தவொரு பிரதிநிதியும் தொழில்நுட்ப முன்மொழிவை திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரரை பிரதிநிதித்தும் செய்து பங்கேற்கிறார் என்று குறிப்பிட்டு குறித்த விலைமனுதாரர்/ நிறுவனத்திடம் இருந்து முறையாக கையொப்பம் இடப்பட்ட அங்கீகாரக் கடிதத்தை சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர்.

10. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது விநியோகிப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களினால் ஏற்படும் எந்தவொரு செலவு அல்லது இழப்புக்கும் SLEDB பொறுப்பாகாது.

தலைவர்/ தலைமை நிறைவேற்று அதிகாரி

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.

இணையதளம்: http://www.srilankabusiness.com